கூட்டம் எண்.08

நாள். 10.07.2020
பூவிருந்தவல்லி நகராட்சி

<u>சிறப்புக் கூட்டம்</u>

<u>முன்னிலை :- திருமதி.மு.ரா.வசந்தி , பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர்</u>

பூவிருந்தவல்லி நகராட்சி தனி அலுவலர் சிறப்புக் கூட்டம் 10.07.2020 காலை 11.00 மணிக்கு நடத்தப்பட்டது. அது சமயம் பொறியாளர், நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர், துப்புரவு ஆய்வர் மற்றும் மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆணையர் (ம) தனி அலுவலர்
பூவிருந்தவல்லி நகராட்சி

**பொருள் எண்.1**

கொரோனா வைரஸ் (Covid-19) நோய் தடுப்பு நடவடிக்கையாக கட்டுப்படுத்தப்பட்ட (Containment Zone) பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் SIDDHA FOODS TECH, மதுரை நிறுவனத்தின் மூலம் 500 கிலோ கிராம் கொள்முதல் செய்துக்கொள்ள திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்.7936/2020/ஐ1, நாள்.03.07.2020–ல் உத்தரவிடப்பட்டு, அதன்படி 500 கிலோ கிராம் கபசுர குடிநீர் தயாரிப்புக்கான சூரணம் மேற்படி நிறுவனத்தில் வாங்கிக்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ.4.00 லட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவலக குறிப்பு</u>

பொதுசுகாதார அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

<u>ந.க. எண். 1498/2020/எச்1</u>

**பொருள் எண்.2**

பூவிருந்தவல்லி நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ், அரசாணை (நிலை) எண்.101, நகராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி, இந்நகராட்சிக்கு 229 துப்புரவுப் பணியாளர்கள் தேவை என்ற நிலையில், 53 நிரந்தர துப்புரவு பணியாளர் பணியிடங்கள் மட்டுமே இருந்ததால், துப்புரவு பணிகள் மேற்கொள்ள போதுமான துப்புரவுப் பணியாளர்கள் இல்லாததால், பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி, அவுட்சோர்சிங் முறையில் ஒப்பந்த அடிப்படையில் கூடுதலாக பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ள முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு 98 துப்புரவு பணியாளர்களை அவுட்சோர்சிங் முறையில் துப்புரவு பணிக்கு ஈடுபடுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்.25580/பி3/2015–1, நாள்.03.09.2015ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, M/s. Ourland Engineering Works Pvt. Ltd. நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண்.32, நாள்.31.01.2017 வாயிலாக ஒப்புதல் பெற்று, 10.02.2017 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு மூன்றாண்டு ஒப்பந்தக்காலம் 09.02.2020–ல் முடிவடைந்தது.

அரசாணையின்படி 2020ம் ஆண்டிற்கு பொதுசுகாதார பணிகளுக்கு 211 துப்புரவு பணியாளர்களை Outsourcing முறையில் துப்புரவு பணிக்கு ஈடுபடுத்திக்கொள்ள தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண்.127, நாள்.31.12.2019ன் வாயிலாக ஒப்புதல் பெற்று, நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் இடைபட்ட காலத்திற்கு 98 பணியாளர்களை வைத்து அவுட்சோர்சிங் முறையில் பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ள 31.07.2020 வரையிலான காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டு துப்புரவு பணி மற்றும் கொரோனா தடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி நீட்டிப்புக் காலம் 31.07.2020ல் நிறைவடைகிறது.

பொதுசுகாதார பணிகள் மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிகள் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து மேற்கொள்ளப்பட நிர்வாக அனுமதி கோரிய கடிதத்தின்பேரில் நினைவூட்டு கடிதம் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது பொதுசுகாதார பணிகள் மேற்கொண்டு வரும் ஒப்பந்த நிறுவனமான எம்/எஸ்.அவர்லேண்ட் இன்ஜினிரிங் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 2017-18ஆம் ஆண்டின் மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விலை விகிதத்தில் (தினக்கூலி ரூ.346/- + ESI 4.75% ரூ.16.44 + EPF 13.61% ரூ.47.10 + சேவை கட்டணம் 10% ரூ.12.00 + சீருடை பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.12.00 = மொத்தம் ரூ.433/-) துப்புரவு பணிகள் மேற்கொள்ள **01.08.2020** முதல் **31.10.2020** வரையிலான மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்திடவும், இதற்கான தோராய செலவினம் ரூ.**40.00** லட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவலக குறிப்பு</u>

பொதுசுகாதார அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க. எண்.494/2015/எச்1</u>**

**பொருள் எண்.3**

பூவிருந்தவல்லி நகராட்சியின் **21** வார்டுகளிலும் வீடுகள் தோறும் தினசரி சேகரமாகும் குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்பட்டு, மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து, அவற்றில் மக்குகின்ற குப்பைகள் நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள **8** பசுமை உரக்குடில் மையங்களுக்கு கொண்டு வரப்பட்டு உரங்கள் தயாரிக்கப்பட்டும், மக்காத குப்பைகளில் விற்பனையாகக்கூடியவைகளை விற்பனை செய்தும், மக்காத குப்பைகள் பயனற்ற கழிவுகள் மற்றும் எரியும் தன்மைக்கொண்ட கழிவுகள் ஒட்டு மொத்தமாக பாரிவாக்கம் பசுமை உரக்குடில் மையத்தில் சேர்க்கப்பட்டு அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப இயலாத காரணத்தால், படப்பை எம்.கே.எஸ். டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு தற்காலிகமாக அனுப்பிவைக்க சம்மந்தப்பட்ட உள்ளூர் டிரான்ஸ்போர்ட் நிறுவனங்கலிருந்து விலைப்புள்ளிகள் பெற்று, தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண்.**262**, நாள்.**15.06.2020**ன் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு, **15.06.2020–** தேதிய செயல்முறைகளின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு **27.06.2020** வரையிலான காலத்திற்கு குப்பைகள் அகற்றப்பட்டமைக்கு பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.**9.00** லட்சம் செலவிடப்பட்டது.

பொதுசுகாதார அவசியம் கருதி மேற்படி குப்பைகள் அகற்றும் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் அதே விலை விகிதத்தில் குப்பைகள் அகற்றும் பணி மேற்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ.**9.50** இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனிஅலுவலர் கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க. எண்.716/2020/எச்1</u>**